

விழுப்புரம் மற்றும் கடலூர் நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி வெற்றி வேட்பாளர்கள் விழுப்புரம் ரவிக்குமார், கடலூர் விஷ்ணு பிரசாத் ஆகியோரை ஆதரித்து வாக்குகளைச் சேகரிக்க வருகிற 5 ஆம் தேதி விழுப்புரம் வருகை தரும் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் அரங்கத்தை அமைக்கும் பணியினை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் @ மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றியச் செயலாளர்கள் தே. முருகவேல், ஜி. இரவிச்சந்திரன், பி. வி. ஆர்.சு.விசுவநாதன், வி. ஜி. பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ. தினகரன், மாணவர் அணி அமைப்பாளர் பா. ஸ்ரீ வினோத், தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் டி. என். ஏ தமின், வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப. அன்பரசு, ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் செல்வ பிரேம் உள்ளிட்ட ஒன்றிய, நகர நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தருமபுரி நாடாளுமன்ற கழக பணிமனையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தர்மபுரி ஒருங்கிணைந்த மாவட்ட கழக 23 அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுடன் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடை பெற்றது.உடன் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,கழக வேட்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி,முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என்.பி. இன்பசேகரன்,நகர செயலாளர் நாட்டான் மாது,மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் தருமச்செல்வன்,சத்யமூர்த்தி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### என்.கௌதமன் தலைமை ! பூண்டி .கே. கலைவாணன் முன்னிலை!

# 'இந்தியா' கூட்டணி நாகை தொகுதியின் செயல்வீரர்கள் கூட்டம்!

### ஏ.கே.எஸ்.விஜயன், உ.மதிவாணன் சிறப்புரை!

*நாகை, மார்ச் 27 -*

நாகை நாடாளுமன்ற தொகுதியின் இந்தியா கூட்டணி நாகை நாடாளுமன்ற தொகுதி மற்றும் நாகை சட்டமன்றத் தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் நாகையில் லலிதா மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் வரவேற்றார். திருவாரூர் மாவட்ட கழக செயலாளர் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே கலைவாணன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வைத்தனர். கூட்டத்தில் மாநில விவசாய அணி செயலாளர் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ கே எஸ் விஜயன் தாட்கோ தலைவர் உ மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்தியா கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை நாடளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் வை. செல்வ ராஜ் வாக்கு கேட்டும் பேசினார். கூட்டத்தில் மாநில விவசாய அணி தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்வேளூர் நாகை மாலி, நாகை ஷா நவாஸ், திருத்துறைப்பூண்டி மாரிமுத்து, தி.மு.க. சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜக வீரபாண்டியன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜெயப்பிரகாஷ், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கே. ஆர். போஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வி.மாரிமுத்து காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் நாகை அமிர்தராஜா திருவாரூர் துரைவேலன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட செயலாளர் ஜி.சுந்தரமூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு சி.பழனிச்சாமி தேசிய குழுவைச் சேர்ந்த சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மா.செல்வராசு, தங்க .தமிழ்ச்செல்வன், அருள்செல்வன், ஆ.வெற்றி, மதிமுக மாவட்ட செயலாளர் பாலச்சந்திரன், ஸ்ரீதரன் நாகை மாவட்ட திமுக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. .ராஜேந்திரன், ப. கோவிந்தராஜன், க..மறைமலை, மாவட்ட கழக பொருளாளர் மு லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன்,

மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர்.டி. எஸ்.சரவணன், செல்வ, செங்குட்டுவன், கே.பழனியப்பன், தாமஸ் ஆல்வா எடிசன். மகா.குமார், சோ.பா. மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், என். சதாசிவம், உதயம் வே. முருகையன், நகர கழக செயலாளர்கள் இரா மாரிமுத்து, மா.மீ. புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் செயலாளர்கள் கா. அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் எம். பாண்டியன் எஸ். பி.டி.சார்லஸ், கோ. சிவக்குமார், இல.பழனி யப்பன், எல்.எஸ்.ஈ பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், உமா.செந்தாமரை திருவாரூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம். ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர் , பொருளாளர் மு. வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ். பாண்டியன், கோ. செல்வம் ஒன்றிய செயலாளர்கள் வீ. அன்பரசன், இரா.பாலச்சந்திரன், சேகர் என்கிற கலியபெருமாள், கோ. தட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், பிரபாகரன், புலிவலம் ஏ.தேவா, கேப்டன். செல்வராஜ், ப.பிரகாஷ், இரா. மனோகரன் ,பால. ஞானவேல்.

வி.எஸ்.ஆர். தேவதாஸ், வே.மனோகரன், ஐ.வி.குமரேசன் நகர செயலாளர்கள் எஸ்.வி.பக்கிரிசாமி, வாரை .எஸ். பிரகாஷ், பா.சிவனேசன் ,நன்னிலம் பக்கிரிசாமி, பேரளம் தியாகு, ஏ.கே.டி. சேரன், பூண்டி.கே. கலைவேந்தன், மற்றும் பனங்குடி ஏ. எஸ். குமார் , குன்னலூர் அன்பழகன், எம். என்.ராஜா, பா.அரவிந்த் மற்றும் நாகை, திருவாரூர் மாவட்டக் கழகத்தின் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் கிளை, வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



'இந்தியா' கூட்டணியின் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பணிமனையை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி தலைமையில். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி. திறந்து வைத்தார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக வெற்றி வேட்பாளர் ச.முரசொலி, தஞ்சை மாநகரக் கழகச் செயலாளர் சண். இராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்லம், எம்.இராமசந்திரன். கே.டி. மகேஸ்கிருஷ்ணசாமி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், மரு.அஞ்சுகம் பூபதி, தொகுதி மேற்பாவையாளர்கள் அக்ரி கே.டி.பி. கணேசன், வீரா.கணேசன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பி.ஜி.ராஜேந்திரன், முத்து உத்திராபதி, சின்னை.பாண்டியன், தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மயிலம் தொகுதி தீவனூரில் நடைபெற்ற நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் 'இந்தியா' கூட்டணி சார்பில் தி.மு.க. கழக ஆரணி நாடாளுமன்ற வேட்பாளர்தரணி வேந்தனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி ,செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### மிகப்பெரிய ஆபத்தில் இருக்கும்

# இந்தியாவை மீட்டெடுக்கும் தேர்தல் இது!

### இந்திய தேசத்தை காப்பாற்ற வேண்டிய தேர்தல் – ஆ.ராசா பேச்சு!

*உதகை, மார்ச் 27 -*

கழகத் தலைவர் அவர்களின் கவலையை போக்கும் வகையில் இது நமக்கான தேர்தல் அல்ல, இந்தியாவிற்கான தேர்தல், இந்திய தேசத்தை காப்பாற்ற வேண்டிய தேர்தல், இந்தியாவினுடைய அரசியலமைப்பை காப்பாத்துகின்ற தேர்தல் என்று அவிநாசி புதிய பேருந்து நிலையம் முன்பு கூடியிருந்த பல்லாயிரக்கான பொதுமக்கள் முன்னிலையில் தனது பிரச்சாரத்தை துவக்கிய கழக துணை பொது செயலாளர், 'இந்தியா' கூட்டணி யின் நீலகிரி நாடாளுமன்ற கழக வேட்பாளர் ஆ.ராசா கூறினார்.



நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அவிநாசி புதிய பேருந்து நிலையம் முன்பு 24.03.2024 ஞாற்றுக்கிழமை அன்று திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நீலகிரி நாடாளுமன்ற தொகுதியின் கழக வேட்பாளர், கழக துணை பொது செயலாளர் ஆ.ராசாவுக்கு பல்லாயிரக்கான பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு வாழ்த்துக்கூறினார். இதில் கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர், அவிநாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கோகுல் கிருபாசங்கர், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், மாவட்ட அவைத் தலைவர் க.நடராசன், பொருளாளர் சு.சாமிநாதன், துணை செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், வழக்கறிஞர் சி.கே.நந்தினி, டிஜிடல் எஸ்.சேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, அவிநாசி ஒன்றிய கழக செயலாளர், திருப்பூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஈ.ப.சிவப்பிரகாஷ், திருமுருகன் பூண்டி ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.பழனிசாமி, சேவூர் ஒன்றிய கழக செயலாளர் க.பால்ராஜ், திருமுருகன் பூண்டி நகர கழக செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, அவிநாசி பேரூர் கழக செயலாளர் திராவிடன் வ.வசந்த குமார், திருப்பூர் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி அவிநாசியப்பன், திருமுருகன்பூண்டி நகர மன்ற தலைவர் நா.குமார், அவிநாசி பேரூராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, அவிநாசி பேரூர் கழக அவைத்தலைவர் ராயப்பா, இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் திராவிடர் கழகம் மாவட்ட காப்பாளர் ராமசாமி, இந்திய தேசிய காங்கிரஸ் தங்கமுத்து, லட்சுமணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முத்துசாமி, பொன்னுசாமி, சண்முகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முத்துசாமி, ஈஸ்வரமூர்த்தி, ம.தி.மு.க. சுப்பிரமணியம், கோவிந்தராஜ், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி குமார், ராயப்பன், ஸ்ரீதர், கணேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பழ.சண்முகம், ரங்கசாமி, நக்கீரன் வெங்கடாசலம், ஆதித்தமிழர் பேரவை மணி, ரங்கசாமி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சிராஜ், அப்பாஸ், மனித நேய மக்கள் கட்சி அபுஷாலிக், ரஹ்மத்துல்லாஹ், பார்வர்டு பிளாக் கட்சி தாமோதரன், மக்கள் நீதி மய்யம் சுரேஷ், தமிழ்ப் புலிகள் சுரேஷ்குமார், திருப்பூர் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.மணி, திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வெ.ராதா கிருஷ்ணன், அவிநாசி பேரூர் திமுக அவைத்தலைவர் ராயப்பா, திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக சிவபாலன் மற்றும் இந்தியா கூட்டணியின் அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஆ.ராசா பேசியதாவது : நீலகிரி பாராளுமன்ற தொகுதியில் ஏறத்தாழ பத்தாண்டு காலமாக வெற்றி பெற்ற போதும், வெற்றி வாய்ப்பு இழந்த போதும் மக்கள் பணியாற்றி வந்திருக்கிறேன், இது மூன்றாவது முறை ஆனால் எப்போதும் அவிநாசியில் இப்படிப்பட்ட மக்கள் வெள்ளத்தை நான் பார்த்ததில்லை, மிகவும் உற்சாகமாக வரவேற்பு அளித்துள்ளீர்கள். என்ன காரணம் நான் உங்களுக்கு நாணயமாக, நல்ல வேலையாளாக பணியாற்றி இருந்தாலும் கூட, ஒரு மிக முக்கிய காரணம் தமிழ்நாட்டிலே மூன்று ஆண்டு காலம் நல்ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற திராவிட மாடலுடைய நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தமிழகத்திற்கு தந்திருக்கும் திட்டங்கள் ஆகும். அதுவே இந்த மகத்தான எழுச்சிக் கூட்டத்திற்கு மிக முக்கிய காரணம், இன்னும் ஒரு காரணம் எவ்வளவோ திட்டங்கள் இருந்தாலும் இன்றைக்கு பெரிய ஆபத்திலே இந்தியா இருக்கிறது. கடந்த இரண்டு நாட்களாக நம்முடைய முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் தமிழகத்தின் வளத்தை காக்கும் திட்டங்கள் குறித்து கம்பீரமாக சொல்லிக் கொண்டிருக்கும் அதே வேளையில், அவரது கவலை, இது நமக்கான தேர்தல் அல்ல, இந்தியாவிற்கான தேர்தல், இந்திய தேசத்தை காப்பாற்ற வேண்டிய தேர்தல், இந்தியாவினுடைய அரசியலமைப்பை காப்பாத்துகின்ற தேர்தல், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்குகின்ற நேரத்தில் ஏறத்தாழ ஓராண்டுகளுக்கும் மேலாக பண்டித நேரு அவர்களும், சர்தார் வல்லவாய் படேல் அவர்களும், அண்ணல் அம்பேத்கார் அவர்களும் வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்தி ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கு மோடி,

ஆர்.எஸ் எஸ், அமித்ஷா ஆகியோரால் ஆபத்து வந்திருக்கிறது. என்பதை, இந்தியாவில் சொல்வதற்கு திராணி தெம்பு வேறு எந்த தலைவருக்கும் இல்லை. எல்லார்க்கும் இடி, இன்கம்டாக்ஸ், சிபிஐ போன்ற அச்சுறுத்தல்களால் முதலமைச்சர்கள் ஆகிய சிபுசோரன், கெஜ்ரிவால் உள்ளிட்டோர் சிறையில் உள்ளனர். இதனால் அனைவருக்கும் பயம். ஆனால், எங்களை பணயம் வைத்தாவது, எங்கள் உயிரை கொடுத்தாவது தமிழகத்தை மட்டுமல்ல இந்த தேசத்தை காப்பாற்றுகின்ற மகத்தான பொறுப்பு எங்களுக்கு உண்டு, எனச் சொல்லும் ஒரே ஒப்பற்ற தலைவர், நம்முடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான், எனவே, நல்லாட்சிக்காகவும் வந்திருக்கிறீர்கள், ஒரு கெட்ட ஆட்சியை தூக்கி எறிய வேண்டும் என்ற ஆதங்கத்தோடும் இங்கு வந்திருக்கிறீர்கள். இந்த இரண்டையும் செய்வதற்கு உங்களின் ஊழியனாக என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். வளமான தமிழகம், வலிமையான பாரதம் மட்டுமல்ல மதச்சார்பற்ற இந்தியாவை காப்பாற்றுவதற்கு அவிநாசியில் இருக்கின்ற பெருமக்களே உங்களை கேட்கிறேன். இங்கு சிவன் கோயில், பெருமாள் கோயில், சர்ச், மசூதி எல்லாம் இருக்கிறது, ஆனாலும், அவிநாசி அமைதியாக இருக்கிறது. அவினாசியில் இருக்கும் இந்த அமைதி இந்தியாவிற்கு பரவ வேண்டும். நாங்கள் சிவன் கோயிலையும் மதிப்போம், பெருமாள் கோயிலையும் மதிப்போம், சர்ச்சுகளையும் மதிப்போம், மசூதிகளையும் மதிப்போம், இந்தியாவில் எல்லோரும் இந்தியர்களாக இருப்போம் என்று சொல்லுகின்ற உணர்வை அவிநாசியில் இருந்து தொடங்குவோம் என்று உங்களையெல்லாம் மன்றாடிக் கேட்டுக் கொண்டு, நம்முடைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொன்னார், கவர்னர் மாளிகையில் தொடக்கி இருக்கின்ற இந்த பிரச்சாரத்தை குடியரசு தலைவர் மாளிகையில் தான் போய் நிற்கும் என்று சொல்லியிருக்கிறார்கள் அப்படிப்பட்ட தலைவருக்கு பின்னால் அணிவகுங்கள்,

கடந்த காலங்களிலே உங்களுக்காக பலமுறை இங்கு வந்து பணியாற்றி இருக்கின்றேன். அந்தப் பணி மேலும் தொடரும். இன்னும் சொல்லப் போனால் அந்த பணியிலே ஏதேனும் குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டினால் முன்பை விடவும் நேர்மையாகவும், நாணயமாகவும், உங்களின் ஊழியனாக பணியாற்றுவேன் என்ற உறுதியை வழங்கி கேட்கிறேன். இந்தியாவை காப்பாற்ற கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளராக நீலகிரி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கூட்டத்தின் தீர்மானங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம் எம்.பி, மாநில வர்த்தகர் அணி தலைவர் கோவி.செழியன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர் முகமது, சாஸ்தா நடராஜன், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள் கலந்துகொண்டனர்.